# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 29.04.2022 ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

**21.03.2022 ஆம் தேதியில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம் எண்.25 – திருத்தியது**

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு A பிளாக்.1 க.ச.எண். 96 நகரளவை எண்.87 இல் 40 அடி திட்ட சாலைக்கு நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய அனுமதி வழங்குமாறு திரு GR. பாலசுப்பிரமணியம் தகப்பனார் பெயர்.G.K.இராமசாமி என்பவரால் 15.02.2022 இல் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்படி இடத்தினை நகரசார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் வார்டு எண் A லக்கம்பட்டி கிராமம் பிளாக் .1 நகரளவை எண் 87/1B1A வார்டு எண்.10 சாய் அபிராமி நகர், புலத்தணிக்கை செய்து மனுதாரர் கோரிய 40 அடி அகல கிழமேல் திட்டச்சாலை அளவீடு செய்து அதன் பரப்பளவு (210 x 12.20 ச.மீ) = 0.2560.0 ஏக்கர் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி 0.2560.0 ஏக்கர் இடத்தினை 40 அ திட்டச்சாலைக்கு திரு.G.K.இராமசாமி ஐயர் மகன் திரு, பாலசுப்பிரமணியம் என்பவர் தமக்கு பாத்தியப்பட்ட பூமியினை (திட்டசாலை) நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யவும் மற்றும் பத்திர பதிவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது ( ந.க.எண்.301/2022/எப்1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**திருத்தியது ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் அனுமதியும் அளிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.41**

**21.03.2022 ஆம் தேதியில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம் எண்.26**

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு நகரமைப்பு பிரிவில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிட அனுமதி கோரும் விண்ணப்பங்களின் மீது 30 நாட்களுக்குள் கட்டிட விண்ணப்பங்களின் மீது முடிவெடுக்கப்பட வேண்டும் என காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 91 மற்றும் 91 A ஆகியவற்றில் கட்டடிட அனுமதி விண்ணப்பங்களின் மீது நகராட்சி ஆணையர் ஒப்புதல் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.எனவே உரிய காலக்கெடுவில் காலதாமதம் இன்றி முடிவெடுக்கவும் வழங்கவும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும் கட்டிட அனுமதி விண்ணப்பங்கள் மீது கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி ஆணையரால் ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் . 438/2021/'எப்1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதி மறுக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.42**

3. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.43**

4. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.44** .

5. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் மார்ச் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.45**

6. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் மார்ச் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மான எண்.46**

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 மற்றும் வார்டு எண்.29 பெரியார் தெரு மற்றும் சங்கரன் வீதியில் சிறுமின்விசை பம்பு சின்டெக்ஸ் தொட்டிகள் பழுதடைந்த நிலையில்

உள்ளது.மேற்படி பழுதை சரிசெய்ய புதிதாக HDPE Tank (1000 lit கொள்ளளவு) மாற்றி அமைக்கப்பட்டு அதன் குழாய் உதிரிபாகங்கள் புதிதாக மாற்றி அமைத்தும் பழுது நீக்கம் செய்திட ஆகும் மதிப்பீட்டு செலவினம் ரூ.20,000/- ஆகும் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மேற்படி பணினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் செலவினத்தை மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதுமன்றத்தீர்மான எண்.47**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15 கபிலர் வீதியில் உள்ள கீரிப்பள்ள ஓடையின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தின் கைப்படி சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது .மேற்படி பாலம் வழியாக பொது மக்கள், பள்ளி குழந்தைகள் செல்வதால் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்க்கும் பொருட்டு மேற்படி பாலத்தில் கைப்பிடி அமைக்கப்பட வேண்டும். மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.70,000/- ஆகும். இப்பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.48**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சேரன் நகர் நுழைவு பகுதியில் வடபுறத்தில் கீரிப்பள்ள ஓடைக்கு தடுப்பு சுவர் பொதுப்பணி துறையினரால் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேரன் நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்களை கீரிப்பள்ள ஓடையில் இணைப்பதற்கு தடுப்பு சுவர் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணினை மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்வதற்கும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.49**

10. இந்நகராட்சி எல்லைக்குள் 30 வார்டுகளிலும் தெருக்களில் ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின் விசை பம்ப் உதவியுடன் Sintex தொட்டியில் நீர் நிரப்பி தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.அதில் ஏற்கனவே குழாய் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாக கீழ்காணும் இடங்களில் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டியுள்ளது.

I .வார்டு எண்.13 :- 1. அங்கு விலாஸ் வீதி சிறுமின் விசை பம்பில் கிழக்கு நோக்கி செல்லும் சவுண்ட் சர்வீஸ் வரை .
2. புகழேந்தி வீதியில் உள்ள சிறுமின் விசை பம்பில் தெற்கு நோக்கி நெல்லை ஆபிரகாம் ஸ்டோர் வரை
3. புதுசாமி கோவில் வீதி சிறுமின் விசை பம்பில் புதுசாமி கோவில் வீதி சந்து தெற்கு நோக்கி

II வார்டு எண்.28:-
4.தேர்வீதி சிறுமின் விசை பம்பிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கு நோக்கியும்
5.குறும்பு மாரியம்மன் கோவில் வீதி சிறுமின்விசை பம்பிலிருந்து வீட்டு வசதி வாரியம் வடக்கு மற்றும் கிழக்கு நோக்கி
6.காட்டு வளவு சிறுமின் விசை பம்ப் லிருந்து பெரியண்ணன் வீதி தெற்கு மற்றும் கிழக்கு நோக்கி கூடுதல் குழாய் நீட்டிப்பு செய்தல்

மேற்படி பணினை மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினத்தை ரூ.2.50 இலட்சத்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எ.ண்.505/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதுமன்றத்தீர்மான எண்.50**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 சிவசண்முகம் வீதியில் உள்ள கீரிப்பள்ளம் ஓடையில் ஆங்காங்கே முட்புதர்களும் ,செடிகளும் வளர்ந்துள்ளதால் ஓடையில் கழிவு நீர் சீராக ஓடாமல் ஆங்காங்கே தேங்கி வருகிறது.அதனால் ஓடையினை Hitachi வாகனம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.இதற்கு தோராய செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும்.இப்பணியினை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பொது சுகாதாரப்பிரவு மூலம் மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி பொது நிதியல் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எ.ண்.564/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.51**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வர்டு எண்.13 யாகூப் வீதி, அங்கு விலாஸ் வீதி , புகழேந்தி வீதி ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறு கைபம்ப் –களில் தண்ணீர் வற்றிய நிலையில் பொது மக்கள் பயன்பாடு இல்லாமல் உள்ளது.மேலும் மேற்படி தெருக்களில் பொருத்தப்பட்டுள்ள கைபம்ப் களால் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே மேற்படி பயன்பாடற்ற நிலையில் உள்ள மூன்று கைபம்ப் களையும் அகற்றிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** (அ). மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ஆ). பயன்பாடற்றற நிலையில் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் இடையூராக உள்ள மூன்று கைபம்ப்– களையும் அகற்றிட அனுமதி வழங்கலாம் .

**அ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.52**

13. கோபிசெட்டிபாளையம் நகராட்சி திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக 21.12.2020 அன்று அறிவிக்கப்பட்டு ODF + சான்றிதழ் பெறப்பட்டு நாளது தேதி வரை புதுப்பிக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதி மொழி சான்றிதழுக்கும் (Self Declaration) இதனை பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துகளை தெரிவிப்பதற்காக தினச்சூரியன் நாளிதழில் 25.02.2022 ஆம் தேதி 15 தினங்களுக்குள் தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டது இருப்பினும் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனைகள் ஏதும் குறித்த நேரத்தில் வரப்பெறவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1853/2019/எச் 1)

**அலுவலகக்குறிப்பு :** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.53**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பழையாஸ்பத்திரி வீதி தினசரி சந்தை கடை எண் 17 ஐ திரு.சின்னகாளியண்ணகவுண்டர் என்பவர் பெயரிலிருந்து இவ்வலுவலக ந.க.எண். 5094/2014/அ3 நாள். 18.12.2013ன் படி, திரு. பி.ஆறுமுகம் என்பவர் பெயருக்கு 2013 ஆம் ஆண்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு பெயர்மாற்றம் செய்யப்பட்டதினை எதிர்த்து, திருமதி சரோஜா என்பவர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். (வழக்கு எண். W.P.No. 8547/2014). மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கினை ஏற்று நடத்திட சென்னை வழக்கறிஞர் திரு.வி.உதயக்குமார் என்பவரை நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இந்நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்கள், தனது 10.02.2022ந் தேதிய குறிப்பில், மேற்படி வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 10.02.2022 ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு வரப்பெற்றதை சென்னை வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த், அவர்கள் வருவாய் ஆய்வர் அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரியப்படுத்தியதின் அடிப்படையில், வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை மேற்படி வழக்கில் ஆஜராகும்படி தெரிவிக்கவும், வக்காலத்து படிவத்தினை அனுப்பவும், ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்றுள்ளார்.

மேலும் வருவாய் ஆய்வாளர் தனது 03.03.2022 ந் தேதிய குறிப்பில், மேற்படி வழக்கு 10.02.2022ஆம் தேதி விசாரணைக்கு வரப்பெற்ற நிலையில், வழக்கறிஞர் திரு.வி.உதயக்குமார் அவர்கள் , வழக்கு விசாரணையில் ஆஜராக காரணத்தினால், அவசர அவசியம் கருதி வழக்கறிஞர். திரு.பி.ஆனந்த் அவர்கள் வழக்கு விசாரணையில் ஆஜராகி உள்ளார் எனவும், எனவே மேற்படி வழக்கில் வழக்கறிஞர் திரு.வி.உதயக்குமார் என்பவருக்கு பதிலாக நகராட்சி சார்பாக வாதிட வழக்கறிஞர்.திரு.பி.ஆனந்த் அவர்களை நியமிக்கவும், வழக்கு தொடர்பாக ஆவணங்களை வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களுக்கு ஒப்படைக்க வழக்கறிஞர் திரு.வி.உதயக்குமார் அவர்களுக்கு தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி வழக்கில் வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை நியமனம் செய்ததற்கும், மேற்படி வழக்கின் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வர் அவர்களின் குறிப்பின்படி, மேற்படி வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களை நியமனம் செய்ததற்கு பின்னேற்பும், மேற்படி வழக்கின் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1815/2014/அ3)

**அலுவலகக்குறிப்பு :** 1) மன்றம் பின்னேற்பு வழங்கலாம்
2) மன்றம் அனுமதிக்கலாம்.

**1) பின்னேற்பு வழங்கலாம். 2) அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.54**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோக திட்டத்தில் வார்டு எண் 11. பூரணி நகர் பகுதியில் உள்ள 2.00 இலட்சம் லிட் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு அங்குள்ள Openwell Sump இல் இருந்து 15 H.P சப்மெர்ஜிபிள் மின் மோட்டார் மூலம் குடிநீர் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. மேற்படி சப்மெர்ஜிபிள் மின் மோட்டார் தேய்மானம் காரணமாக திறன் குறைந்து தண்ணீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு ஏற்றுவதில் தாமதம் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலை ஏற்படுகிறது.

எனவே தற்போதைய கோடைகாலத்தில் பொது மக்களுக்கு தடையில்லாமல் குடிநீர் விநியோகம் செய்திட மேற்படி பழுதான மோட்டாருக்கு பதில் புதிதாக 20 H.P Openwell Submergible மின் மோட்டார் மற்றும் Starter panel உபகரணங்களுடன் வாங்கி பொருத்தப்பட வேண்டும்.அதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.1.30 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும் ) ஆகும் . மேற்படி பணினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.55**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சக்கு சொந்தமான ஆழ்துளை கிணறு சிறுமின் விசை பம்ப் , மோட்டார்கள் 30 வார்டுகளிலும் சுமார் 250 எண்கள் உள்ளது. மேற்படி மோட்டார்கள் மூலம் பொது மக்களின் அன்றாட தேவையான குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கு இயக்கப்படுகிறது. இதில் 1.00 H.P முதல் 5.00 H.P வரை மோட்டார்கள் உள்ளது.

மேற்படி மோட்டார்கள் ,பம்ப்கள் மின் ஒயர் பழுது ஸ்டார்ட்டர் மற்றும் பேனல்கள் இவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து இயக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பழுது நீக்கம் பராமரிப்பு பணிகள் 2022–23 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.9.00 இலட்சம் ஆகும் .மேற்படி பணியினை மேற்கொள்ளவும் ,செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டதுமன்றத்தீர்மான எண்.56**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதை கூடம் இயங்குவதற்கு தேவையான அனுமதி (Consent to operate) தமிழ்நாடு மாசு கட்டப்பாட்டு வாரியத்திடம் பெறுவதற்கு உரிய கட்டணம் ரூ.12000/–(பனிரெண்டாயிரம் மட்டும் ) செலுத்தப்பட வேண்டியுள்ளது.மேற்படி இயக்க அனுமதி (Consent to operate) (Air & Water) பெறுவதற்கு செலவினம் மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.3812/2007/இ1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.57**

18. தமிழ்நாடு அரசு அரசிதழ் (சிறப்பு) எண்.194 நாள்.30.03.2022 மற்றும் அரசாணை (நிலை) எண். 52 நாள்.30.03.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை இல் அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் சொத்து வரி பொது சீராய்வு செய்து 2022–2023 (01.04.2022) முதலாம் அரையாண்டு முதல் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.01.04.2022 இன் படி தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சொத்து வரி மற்றும் காலியிட வரி பொது சீராய்வு அறிவிக்கை விளம்பரம் செய்தல், சொத்து வரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அச்சகத்தில் அச்சடித்துக் கொள்ளவும், அரசிதழில் செய்தி வெளியிடவும் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/– (மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.684/2022/அ1)

**அலுவலக குறிப்பு :–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**1) மற்றும் 2) அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.58**

19. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 54 ஐ, இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண். 301/2021/அ3 நாள். 19.11.2021ன் படி, திரு.கே.இளங்கோவன் த/பெ. கிருஷ்ணசாமி என்பவருக்கு 20.11.2021 முதல் 19.11.2024 முடிய மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி நபர் கடை மிகவும் பழுதடைந்துள்ள உள்ளதால், கடையினை தொடர்ந்து நடத்த முடியவில்லை எனவும், மார்ச் 2022 மாதம் முதல் மேற்படி தனது கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பதாக 29.03.2022 ந் தேதியில் மனு அளித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 08.04.2022 ந் தேதிய குறிப்பில் மேற்படி கடையினை 04.04.2022ந் தேதி முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி கடைக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை இரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 54 க்கு (வரிவிதிப்பு எண். 057/BD01/00036) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி கடைக்கான கேட்பினை 2022 ஏப்ரல் மாதம் (01.04.2022) முதல் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 301/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.59**

20. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 32 கடைகளுக்கு 13.04.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 7 மற்றும் 8.

1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 33, 34, 42, 43, 48, 53, 55, 57, 58, 59, 60, 61, 66, 67, 69, 70, 71, 72, 73, 74
2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 56, 45
3. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20.
4. வாரச்சந்தை கடை எண்.2, 3 மற்றும் 31
5. பழைய ஆஸ்பத்திரி வீதி கடை எண். 16, 12
6. பழைய ஆஸ்பத்திரி வீதி கோழி கடை எண். 2
7. பழைய பேருந்து நிலையம் MUDP கடை எண். 4

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டவாறு இரண்டு கடைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | குழு பரிந்துரை செய்த மாத வாடகை ரூ. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | | [5] |
| 1 | வாரசந்தை IUDP கடை எண். 3 | சி.சரவணன் த/பெ. குருநாதன், ஏ109, சுண்டப்பாளையம், கோபி 638 476 | ரூ.2,100/- | ரூ.2,300/- | இல்லை |
| | | ஜி,சௌந்தர் ராஜன் த/பெ. ஏ.குருநாதன், 109, சுண்டப்பாளையம், கோபி 638 476 | ரூ.2,100 | **ரூ.2,500/-** | |
| 2 | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 48 | ஜே.தனபால் த/பெ. ஜெகநாதன், சுண்டப்பாளையம், மாகாளி அம்மன் கோயில் வீதி, கோபி 638476 | ரூ.1,500/- | **ரூ.1,600/-** | இல்லை |
| | | வி.பாபு த/பெ. விஸ்வநாதன், கருமாயா வீதி 4, கோபி | ரூ.1,500/. | ரூ.1,500/. | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில்

1. வரிசை எண். 1 வாரசந்தை IUDP கடை எண். 3 க்கு திரு.சி.சரவணன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியைவிட கூடுதலாகவும், குழு நிர்ணயித்த வாடகை ரூ.2,100/- ஐ விட கூடுதலாக ரூ.400/- சேர்த்து திரு.ஜி.சௌந்தர் ராஜன் த/பெ. ஏ.குருநாதன் என்பவர் ரூ.2,500/-க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

2. வரிசை எண். 2 பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 48 க்கு திரு.பாபு என்பவரது ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், குழு நிர்ணயித்த வாடகை ரூ.1,500/- ஐ விட கூடுதலாக ரூ.100/- சேர்த்து திரு.ஜெ.தனபால் த/பெ. ஜெகநாதன் என்பவர் ரூ.1,600/- க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளார்.

எனவே வரிசை எண். 1 வாரசந்தை IUDP கடை எண். 3, மற்றும் வரிசை எண். 2 பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 48 ஆகியவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

3. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். (ந.க.எண். 301/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**வ.எண்.1 கலம் 2க்கு கலம் 3ல் காணும் ஜி .சௌந்தர் ராஜனின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**
**வ.எண்.2 கலம் 2க்கு கலம் 3ல் காணும் ஜே .தனபால் ன் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது**
**ஏலம் போகாத மற்ற கடைக ளுக்கு மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.60**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் 2020–2021 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி தணிக்கை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்பு ( 9பிரதிகள்) டைப் செய்து பிரிண்ட் அவுட் எடுக்க போதிய வசதி இல்லாததால் தனியார் நிறுவனத்திடம் டைப் செய்து பிரிண்ட் அவுட் எடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/– ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1389/2020/பி3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.61**

22. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணி யினை செய்வதற்கு 12.04.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் .12 சி.கே.எஸ் நகரில் பூங்கா அமைக்கும் பணி | 12,00,000 | **M/s.K.V.C.S கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி ஒப்பந்ததாரர் , கோபிசெட்டிபாளையம்** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s .லோகு கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் , கோபிசெட்டிபாளையம் | 1.31 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்படி பணிகளில் வ.எண். 1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.K.V.C.S கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கம்பெனி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

   **அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.62**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் ,திட்டப்பணிகள் பொதுப்பணிகள் ,குடிநீர் நிதி பணிகள் மற்றும் கல்வி நிதி ஆகியவற்றின் கீழ் செய்யப்படும் பணிகளின் ஒப்பந்ததாரரர்களின் வேலைக்கான பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி (IT) , சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஆகியவற்றினை 2022 –23 ஆம் ஆண்டிற்கு அரசு தலைப்பு கணக்கில் செலுத்தி e–filling செய்திட செலவினம் ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும் ) க்கு அனுமதியும் e–filling திரு.S.சக்திவேல் ஆடிட்டர் என்பவர் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமுதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.63**

24. இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் உருவாகும் பிளாஸ்டிக் மற்றும் எரியும் தன்மையுடைய கழிவுகளை Ultra Tech Cement Factory, அரியலூர் மற்றும் Dalmia Cement Factory, திருச்சி ஆகிய சிமெண்ட் ஆலையின் அனுமதி பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு சென்று அப்புறப்படுத்தும் பணிக்கும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் ஏற்கனவே மன்ற தீர்மானம் எண்.19 நாள்.21.03.2022 இல் ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கு 08.04.2022 ஆம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் (ரூ.) |
|---|---|---|
| 1 | E. விஸ்வநாதன்,<br>8, வேலுமணி நகர் முதல் தெரு,<br>கோபிசெட்டிபாளையம் – 638452 | ரூ. 17,970/– |
| 2 | G.S. நடராஜன்,<br>70, நஞ்சப்பா வீதி,<br>கச்சேரி மேடு,<br>கோபிசெட்டிபாளையம் – 638452 | ரூ. 18,245/– |

**(ந.க.எண். 344/2020/எச் 1)**

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**1) அனுமதிக்கப்பட்டது 2) ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.64**

25. ந.க.எண். 2575/2017/அ3

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9 (வரி விதிப்பு எண் 057/569) அகமது என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி கடையின் உரிமகாலம் 31.03.2022ந் தேதியுடன் முடிவடைகிறது.

வருவாய் ஆய்வர் தனது 18.04.2022 ந் தேதிய குறிப்பில் மேற்படி அகமது என்பவர் இறந்துவிட்டபடியால், மேற்படி கடையின் உரிமத்தை புதுப்பிக்க இயலவில்லை எனவும், அவருடைய வாரிசுதாரர்களும் பெயர் மாற்றம் தொடர்பாக எந்தவொரு விண்ணப்ப கடிதமும் வழங்கவில்லை என தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி கடையினை 18.04.2022 ந் தேதி முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே புதிய பேருந்து நிலைய IUDP கடை எண். 9 க்கு (வரி விதிப்பு எண் 057/569) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1567/2018/அ3)

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.65**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் ஒலி, ஒளி அமைத்து விளம்பரம் செய்வது தொடர்பாக வருவாய் ஆய்வர் தனது 19.04.2022 ந் தேதிய குறிப்பின் படி பேருந்து நிலையத்தில் ஒலி, ஒளி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமத்தினை மூன்று ஆண்டு குத்தகை இனமாக புதியதாக ஏற்படுத்திட மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 2977/2020/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.66**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் .26 சிவசண்முகம் வீதி 2 வது தெருவில் உள்ள பெண்கள் கழிப்பிடம் பழுதடைந்த நிலையில் மழைக்காலத்தில் இடிந்து விழும் நிலையில் உள்ளது. எனவே மற்படி பழுதடைந்து விழும் நிலையல் உள்ள கழிப்பிடத்தை இடித்து அகற்றிவிட்டு அந்த இடத்திலேயே புதிதாக பெண்கள் கழிப்பிடம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதியும் செலவினத்தை நகராட்சி பொது நிதியல் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எ.ண்.831/2022/இ1)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.67**

28. இந்நகராட்சியில் பொறியாளர் நிலை II ன் பணியிடம் அரசாணை எண் 168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.03.1990ன்படி தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும், மேற்படி பணியிடத்தை பணி நீட்டிப்பு பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.55526/2011/எப்3 நாள்.19.12.2012 ல் 1.10.2012 முதல் 30.9.2013 வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், நகராட்சி பொறியாளர் நிலை –II பணியிடம் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும், இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு 32 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதாலும், மேற்படி

பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செவினத்தை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண். 643/2022/சி1

**அலுவலகக்குறிப்பு :** நகராட்சி பொறியாளர் நிலை –II பணியிடத்தினை 1.10.2013 முதல் 30.09.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.68**

29. இந்நகராட்சியிலுள்ள வரைவாளர் நிலை –III பணியிடமானது அரசாணை எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 2.2.1993 ன்படி தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.55526/2011/எப்3 நாள்.19.12.2012 ல் 1.10.2012 முதல் 30.9.2013 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியிடமானது மிகவும் அத்தியாவசிய தேவையாக உள்ளதால் 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 640/2022/சி1)

**அலுவலகக்குறிப்பு :** வரைவாளர் பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.69**

30. இந்நகராட்சிக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின் கீழ் உள்ள சத்துணவு மையங்களுக்கு குடிநீர் வழங்க இரண்டு மிட்சிபிட்சி, பவர் டில்லர், ஓட்டுநர் பணியிடங்களை தோற்றுவித்துக்கொள்ள அரசாணை எண் 518, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 15.12.1984 ன்படி அனுமதிக்கப்பட்டது. கடந்த 37 ஆண்டுகளாக மேற்படி இரண்டு பணியிடங்களுக்கும், தொடர்ந்து பணி நீடிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.55526/2011/எப்3 நாள்.19.12.2012 ல் 01.10.2012 முதல் 30.09.2013 வரை நீடித்து வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரண்டு பவர் டில்லர்கள் தற்போது பயன்பாட்டில் இல்லாததால், ஒரு ஓட்டுநரை குடிநீர் லாரியை ஓட்டுவதற்கும், ஒரு ஓட்டுநரை நகர்மன்றத்தலைவரின் ஈப்பினை ஓட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி பணியிடம் இந்நகராட்சிக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் தொடர்ந்து 37 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருவதாலும், இப்பணியிடத்தை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ந.க.எண்.637/2022/சி1

**அலுவலகக்குறிப்பு :** இரண்டு மிட்சிபிட்சி பவர் டில்லர் ஓட்டுநர் பணியிடங்களை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சென்னை அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.70**

31. இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு ஒரு மின்கண்காணிப்பாளர் நிலை–1 பணியிடமானது அரசாணை எண்237, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை,நாள் 14.2.1975 ன் மூலம் தோற்றுவிக்கப்பட்டு தொடர்ந்து 47 ஆண்டுகளுக்கு மேலாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது.

இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.55526/2011/எப்3 நாள்.19.12.2012ன் மூலம் 01.10.2012 முதல் 30.09.2013 வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் இப்பணியிடம் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதாலும், இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு 47 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியாலும், இப்பணியிடத்தை 1.10.2013 முதல் 30.9.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 1.10.2022 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செவினத்தை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண். 642/2022/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மின்கண்காணிப்பாளர் நிலை – 1 பணியிடத்தினை 1.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.71**

32. இந்நகராட்சிக்கு ஒரு பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் அரசாணை எண் 7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 2.2.1993 ன்படி தோற்றுவிக்கப்பட்டு, இப்பணியிடம் 20.03.1994 ம் தேதியில் பூர்த்தி செய்யப்பட்டு 29 வருடங்கள் முடிந்து விட்டன. ஒவ்வொரு ஆண்டும் பணியிட நீட்டிப்பு அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக இப்பணியிடம் 1.10.2012 முதல் 30.9.2013 வரை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.55526/2011/எப்3 நாள்.19.12.2012ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி, இப்பணியிடம் இந்நகராட்சிக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் தொடர்ந்து 29 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருவதாலும், இப்பணியிடத்தை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 641/2022/சி1)

**அலுவலகக்குறிப்பு** : பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீட்டித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.72**

33. இந்நகராட்சியில் பண்டகக் காப்பாளர் பணியிடம் (உதவியாளர் நிலை) அரசாணை எண் 764, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 19.05.1984 ல் அனுமதிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பணி நீட்டிப்பு ஆணை பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் மூ.மு.எண். 25678/2016/எச்1 நாள். 28.11.2016ல் 01.10.2011 முதல் 30.9.2016 வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும் இப்பணியிடம் இந்நகராட்சிக்கு தொடர்ந்து தேவைப்படுவதாலும் இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு 38 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதாலும், இப்பணியிடம் 1.10.2016 முதல் 30.9.2022 வரை நீட்டித்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2022 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 639/2022/சி1)

**அலுவலகக்குறிப்பு :** பண்டக காப்பாளர் (உதவியாளர் நிலை) பணியிடத்தினை 1.10.2016 முதல் 30.9.2022 வரை நீட்டித்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் 1.10.2022 முதல் நிரந்தரமாக நீடித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.73**

34. இந்நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையத்தில் வடிகட்டும் படுகை இயக்குபவர் பணியிடம் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 19.01.1976 ன்படி தோற்றுவிக்கப்பட்டு கடந்த 46 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருகிறது. இறுதியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.55526/2011/எப்3 நாள்.19.12.2012 ல் 01.10.2012 முதல் 30.09.2013 வரை கால நீட்டிப்பிற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடம் இந்நகராட்சிக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் தொடர்ந்து 46 ஆண்டுகளாக தொடர் அனுமதி பெறப்பட்டு வருவதாலும், இப்பணியிடத்தை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண். 638/2022/சி1)

**அலுவலகக்குறிப்பு :** வடிகட்டும் படுகை இயக்குபவர் பணியிடத்தினை 01.10.2013 முதல் 30.09.2022 வரை நீடித்து வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும், 01.10.2022 முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அதற்கான செலவினத்தை ஏற்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ஒப்புதல் அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.74**

35. ந.க.எண். 2575/2017/அ3

இந்நகராட்சிக்கு சொந்தமான பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைகளுக்கு கிழபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 5, திருமதி.எம்.ராமாயாள் க/பெ. குப்புசாமி என்பவருக்கு 01.04.2021 முதல் 31,03.2024 முடிய மூன்று ஆண்டுகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. மேற்படி நபர் தனது கடைக்கு 2021 ஏப்ரல் மாதம் முதல் 2022 மார்ச் மாதம் வரையிலான வாடகை ரூ.22,836/– செலுத்தாமல் நிலுவையாக உள்ளது.

வருவாய் ஆய்வர் தனது 14,03.2022ந் தேதிய குறிப்பில் மேற்படி நிலுவை வாடகை செலுத்தாத காரணத்தினால் மேற்படி கடையினை 14.03.2022 முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி கடைக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை இரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைகளுக்கு கிழபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 5, க்கு (வரிவிதிப்பு எண். 057/BD01/00018) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி கடைக்கான கேட்பினை 2022 ஏப்ரல் மாதம் (01.04.2022) முதல் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1567/2018/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.75**

36. ந.க.எண். 3060/2016/அ3

இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 21, திரு.எஸ்.சந்திராசாமி என்பவருக்கு 01.04.2020 முதல் 31,03.2023 முடிய மூன்று ஆண்டுகளுக்கு 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து குத்தகை உரிமம் வழங்கப்பட்டது. மேற்படி நபர் கொரோனா நோய் தொற்று காரணமாக கடையினை தொடர்ந்து நடத்த முடியவில்லை எனவும், எனவே மார்ச் 2022 மாதம் முதல் தனது கடையின் குத்தகை உரிமத்தை நகராட்சி வசம் ஒப்படைப்பதாக 16.03.2022 ந் தேதியில் மனு அளித்துள்ளார்.

வருவாய் ஆய்வர் தனது 08.04.2022 ந் தேதிய குறிப்பில் மேற்படி கடையினை 04.04.2022ந் தேதி முதல் நகராட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி கடைக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை இரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 21 க்கு (வரிவிதிப்பு எண். 057/837) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மேற்படி கடைக்கான கேட்பினை 2022 ஏப்ரல் மாதம் (01.04.2022) முதல் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1567/2018/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.76**

37. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள தினசரி மார்க்கெட் வாரச்சந்தை, பழக்கடைகள், மற்றும் இறைச்சி கடைகள் போன்றவற்றில் உருவாகும் உணவுக் கழிவுகள், காய்கறி கழிவுகள், இறைச்சி கழிவுகள் போன்றவற்றை கரட்டூரில் அமைக்கப்பட்டு இயக்கப்பட்டு வரும் Bio – Methanation Plant இல் இட்டு Bio – Gas தயார் செய்யப்பட்டு வருகிறது. அந்த Plant இல் உள்ள Genset, Shredding Motor, Pumping Motor மற்றும் இதர இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவற்றில் அவ்வபோது ஏற்படும் பழுதுகளால் உற்பத்தி பணி பாதிப்படைகிறது எனவே அவசர அவசியம் கருதி பழுதுகள் அவ்வபோது ஏற்படும் பொழுது பழுதுகளின் தன்மைக்கேற்ப பழுதுகளை உள்ளூர் நிறுவனங்களில் செப்பனிட்டு கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/– ற்க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பழுதுகளின் தன்மைக் கேற்ப மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– வரை செலவிட்டுக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 866/2022/எச்1)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.77**

38. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை கரட்டூரில் உள்ள நுண் உரக்கூடத்தில் (Micro Composting Center) உரமாக்கப்பட்டு வருகிறது. மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிக்கு குப்பைகளை துகள்களாக்கும் பல்வரைசர் இயந்திரத்தில் பொருத்தப்பட்டு இயங்கி வரும் Conveyer Belt பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் பழுதான Conveyer Belt ஐ மாற்றி விட்டு புதியதாக 6m Lenth, 1m Width 3Ply மற்றும் 12mm Thick கொண்ட Conveyer Belt ஐ கொள்முதல் செய்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பணியின் அவசர அவசியம் கருதி உடன் பணி மேற்கொள்ள Conveyer Belt விநியோகம் செய்து இயந்திரத்தில் பொருத்தும் பணியினை மேற்கொண்டு வரும் M/s.Eco Environs Solutions,20/2, Twin Apartment, Indiragandhi Street, Jai Nagar 2nd Street, Palayapalayam Pirivu, Erode – 638 011 அவர்களிடம் மதிப்பீட்டுஅறிக்கை பெற்றதில் இப்பணிக்கு ரூ.40,000/– ஆகும் என மதிப்பீடு சமர்ப்பித்துள்ளார் எனவே அந்நிறுவனத்தாரிடம் அந்நிறுவனத்தின் விலை விகிதத்தில் புதியதாக Conveyer Belt கொள்முதல் செய்து பொருத்தி தொடர்ந்து பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.( ந.க.எண்.834/2022/எச்1)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.78**

39. இந்நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் 4 பொதுக்கழிப்பிடங்கள் 27 சமுதாய கழிப்பிடங்கள் செயல்பட்டு வருவதுடன் பேருந்து நிலையத்தில் இலவச சிறுநீர் கழிப்பிடம், தாய்மார்கள் பாலூட்டும் அறை, பயணிகள் காத்திருப்பு அறை போன்ற கழிப்பிடங்களும் செயல்பாட்டில் உள்ளன. இக்கழிப்பிடங்களை கிருமிநாசினி கொண்டு தொடர்ந்து தினமும் நல்ல முறையில் சுத்தம் செய்ய அதிக அழுத்தத்துடன் தண்ணீரை பீச்சியடிக்கும் 6 இயந்திரங்களை கொள்முதல் செய்து சுத்தம் செய்யும் பணியினை மேற்க்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூபாய் தொண்ணூறாயிரத்திற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.833/2022/எச்1)

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.79**

40. இந்நகராட்சியில் பொது சுகாதார பயன்பாட்டிற்காக இயக்கப்பட்டு வரும் Front End Loader (Tractor) வாகனம் எண். TN 36 AJ 2139 வாகனம் ஓராண்டு காலத்திற்கு மேல் இயக்கப்பட்டுவிட்டதால் அவ்வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்து பழுதான பாகங்களான கிளட்ச் கவர் அசெம்பிளி, ரிலிசிங் பேரிங், பேரிங் PTO போன்ற பாகங்களை மாற்ற வேண்டியிருந்ததால், பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இவ்வாகனத்திற்கு மகேந்திரா டிரேக்டர்ஸ் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிமனையான M/s. செந்தூர் டிரேக்டர்ஸ், லோட்டஸ் நகர், ஈரோடு மெயின் ரோடு, குள்ளம்பாளையம் அவர்களிடம் ஆயில் சர்வீஸ் செய்தும், பழுதான பாகங்களை மாற்றியும், பழுதுகள் செப்பணிட்டும் பணிகள் முடிக்கப்பட்டது. இப்பணி மேற்கொண்டதற்கான பட்டியல் தொகை ரூ. 43,800/– யை M/s. செந்தூர் டிரேக்டர்ஸ், கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி வாகனத்திற்கு முன்பக்க டயர்கள் மற்றும் பின்பக்க டயர்கள் முழுவதும் பட்டன்கள் தேய்ந்து விட்ட படியால் அவ்வாகனத்திற்கு MRF டயர் கம்பெனியின் முன்பக்க டயர் சைஸ் 8.3 X 24 இரண்டு எண்ணிக்கையும், பின்பக்க டயர் சைஸ் 14.9 X 28 இரண்டு எண்ணிக்கையும் மற்றும் பின்பக்க டியூப்கள் இரண்டு எண்ணிக்கை புதியதாக மாற்றிக்கொள்ளவும், மேற்படி டயர்களை MRF டயர் விற்பனை செய்யும், கீழ்காணும் விற்பனை மையங்களில் 21.04.2022 ஆம் தேதி அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு : –

| வ. எண். | நிறுவனங்களின் விபரம் | விலைப்புள்ளி தொகை (ரூ.) (8.3 X 24 Size MRF Front Tyre – 2 No's 14.9 X 28 Size MRF Back Tyre – 2 No's MRF Tube – 2 No's) |
|---|---|---|
| 1 | M/s. சக்தி டயர்ஸ்,<br>59, பஜனை கோவில் வீதி,<br>புதுப்பாளையம்,<br>ஈரோடு – 638 476 | 76,550/– |
| 2 | M/s. கோபி மோட்டார்ஸ்,<br>ஜெ.ஜெ. நகர், கரட்டூர்,<br>ஈரோடு மெயின் ரோடு,<br>கோபிசெட்டிபாளையம் – 638 476 | 74,490/– |
| 3 | M/s. டயர் மார்ட்,<br>14, பஜனை கோவில் வீதி,<br>ஈரோடு மெயின் ரோடு,<br>கோபிசெட்டிபாளையம். | 77,920/– |

மேற்குறிப்பிட்ட விவரப்படி விலைவிகிதம் வழங்கிய நிறுவனங்களில் வரிசை எண். 2 இல் குறிப்பிட்டுள்ள M/s. கோபி மோட்டார், ஜெ.ஜெ நகர், கரட்டூர், ஈரோடு மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம் அவர்களின் விலைவிகிதம் மற்ற இரண்டைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தின் MRF டயர் விற்பனை விலைவிகிதத்தின் படி ரூ. 74,490/– விலையில் கொள்முதல் செய்து பொருத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2343/2021/எச் 1)

**அலுவலக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ் செய்து பழுதான பாகங்களை மாற்றி புதிய பாகங்கள் பொருத்தி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**1) அனுமதிக்கப்பட்டது 2) ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்றத்தீர்மான எண்.80**

41. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டு பகுதிகளிலும் நெகிழி பயன்பாட்டை தவிர்ப்பதற்கு விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பொது மக்களுக்கு நெகிழி பயன்பாட்டை தவிர்த்து மஞ்சள் பை உபயோகிப்பதன் அவசியத்தை விழிப்புணர்வு மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சியின் நெகிழி பயன்பாட்டினை தவிர்க்கும் பணிக்கு பின்வரும் விபரப்படி விழிப்புணர்வு நோட்டீஸ்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் போன்றவற்றை கொள்முதல் செய்து விழிப்புணர்வு பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தேவைப்படும் படிவங்களின் விபரங்கள் :

| **வ. எண்.** | **விபரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | நெகிழி பயன்பாட்டை தவிர்த்து மஞ்சள் பை உபயோகத்தினை பயன்படுத்தும் விழிப்புணர்வு மல்டி கலர் கோட்டட் ஸ்டிக்கர்கள் | 20000 |
| 2. | மல்டி கலர் நோட்டீஸ்கள் (4 பக்கம் கொண்டது) | 40000 |

மேற்குறிப்பிட்ட படிவங்களை அச்சடித்து கொள்முதல் செய்வதற்கும், இப்பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண். 863/2022/எச் 1)

**அலுவலக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.81**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி